**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 238/2016 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | திரு. மணிகண்டன் |
| Father's Name/Husband Name: | திரு. பால்ராஜ் |
| Village : | தேவையூர் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 40/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 07.01.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 ரமேஷ் 2 கோபால் ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். சாட்சி முத்தம்மாள், பச்சமுத்து ஆகியோரைத் தெரியும். அவர்கள் தேவையூரில் வசித்து வருகிறார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிஸ் விசாரணையின் போது கடந்த 22.08.2012ம் வருடத்தில் தேவையூர் கிராமத்தில் உள்ள எனது வயல்காட்டில் நான் வேலை செய்து கொண்டிருந்த போது பக்கத்து வயக்காட்டில் சாட்சிகள் முத்தம்மாள், பச்சைமுத்து ஆகியோர் அவர்கள் வயலில் விதை விதைத்துக் கொண்டிருந்ததாகவும் அப்போது எதிரிகள் இருவர்கள்

அங்கு வந்து ஆபாசமாக பேசி இங்கு உனக்கு எங்கடி நிலம் உள்ளது என்று சொல்லி கீழே கிடந்த வேப்பங்கட்டையை எடுத்து சாட்சி முத்தம்மாளின் வலது பக்க தலையில் அடித்தும் பச்சைமுத்துவை எதிரி ரமேஷ் கண்ணத்தில் அறைந்து காலால் எட்டி உதைத்து தென்னை மட்டையை எடுத்து இடது முன்கையில் பச்சைமுத்துவினை அடித்து இரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றும் அப்போது அந்த தென்னை மட்டையால் இடது புற முகத்தில் அடித்ததாகவும் பின்னர் கொலைமிரட்டல் செய்ததாகவும் அந்த நிகழ்வினை நேரில் பார்த்ததாகவும் அதுப்பற்றி போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.